MCOP.No. 25/2017

Dated : 15.02.2024

Time: 11.10 a.m to 11.20 a.m

P.W- 1 சாட்சி பிரியா சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் சார்பாக குறுக்கு விசாரணை.

<u>குறுக்கு விசாரணை</u>

1) விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்து நடந்த இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலைதான். விபத்து நடந்த்திற்கு அருகில் மேம்பாலம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் எந்த வாகனம் வந்தாலும் நிதானமாகவும், கவனமாகவும் தான் வருவார்கள் என்றால் சரிதான். மேற்படி கார் TN33 AS 8926 என்ற டாடா ஏசி வாகனம் ஓட்டுநர் விபத்து சமயத்தில் மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டி வந்தார் என்றால் அது தவறு. என் கணவர்தான் விபத்து சமயத்தில் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தார் என்றால் அது தவறு. அவர் எப்போதும் மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டுவார். நான் மனுவிற்காக வேண்டி அவர் எப்போதும் மெதுவாகத்தான் ஓட்டுவார் என்று பொய் சொல்கிறேன் என்றால் அது தவறு.

2) என் கணவருக்கு சொந்தமான விவசாய நிலங்களில் தற்போது விவசாயம் செய்து தான் வருகிறோம். தற்போதும் சேகோ தொழிற்சாலை இயங்கிக்கொண்டு தான் இருக்கிறது என்றால் சரிதான். தற்போதும் நாங்கள் அதற்கு வருமான வரி செலுத்தி வருகிறோம். 2ம் எதிர்மனுதாரர் எங்களிடம் கணவர் இறந்துவிட்ட பிறகும் சேகோ தொழிற்சாலையில் வருமானவரி செலுத்தியதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு மனு தாக்கல் செய்யப்பட்டும் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. என் கணவர் உயிரோடு இருந்ததிருநதால் தற்போதும் வருமான வரி செலுத்தியிருப்பார்.

3) என் கணவர் இறந்த பிறகும் எங்களுக்கு சேகோ தொழிற்சாலை மற்றும் விவசாய நிலங்கள் மூலம் வருமான வருகிறது என்றால் சரிதான். என் கணவர் இறந்துவிட்டதால் எங்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவர் இருந்திருந்தால் எங்களுக்கு இன்னும் பலமடங்கு வருமானம் வந்திருக்கும். மேற்படி விவரத்தை நான்மனுவிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி டெம்போ வாகன ஓட்டுநரை இவ்வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அதனால் இம்மனு அவசியமான தரப்பினரை சேர்க்காததால் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் அது தவறு-. மேற்படி விபத்து என் கணவரின் கவனகுறைவால் ஏற்ப்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டியதில்லை என்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இம்மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/-K.Ananthan**
**Accidents Claim Tribunal, Attur**